

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இராமபுரம் ஊராட்சியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த சுகாதார பணிகளை இன்று (01.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 590/2016 நாள்: 01.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இராமபுரம் ஊராட்சியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த சுகாதார பணிகளை இன்று (01.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், இராமபுரம் ஊராட்சிக்குட்பட்ட கோட்டவிளை பகுதியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் சுகாதாரதுறை பணியாளர்கள் இணைந்து மேற்கொண்டு வரும் ஒருங்கிணைந்த சுகாதார பணிகளை இன்று (01.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நமது மாவட்டத்தில் உள்ள 95 ஊராட்சிகளிலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் சுகாதார பணியாளர்கள் மூலம் ஒருங்கிணைந்த சுகாதாரபணிகள் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 2-ம் தேதி வரை மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக இப்பணிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரை பாதுகாப்பாக வழங்கிட, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி சுத்தப்படுத்தி, அதில் குளோரின் தன்மையை உறுதி செய்யப்படுகிறது. தூய்மை காவலர்கள் மூலம் கிராம பகுதிகளில் உள்ள குப்பைகளை சுத்தபடுத்தப்படுகிறது.

மேலும் பொதுமக்களிடையே டெங்கு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி, அதில் தமிழக அரசின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளை பின்பற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணிகளை சிறப்பாக செய்து முடித்திட, பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து நிலவேம்பு குடிநீரினை பொதுமக்களுக்கு வழங்கினார்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்சி லீமா அமலினி, உதவி இயக்குநர் (பொ) (ஊராட்சிகள்) திருமதி. ராணி, இராமபுரம் ஊராட்சி தலைவர் திரு. பாஸ்கரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. முத்துகுமார், திருமதி. உதயராணி, சுகாதாரதுறையின் சார்பாக திரு. வர்க்கீஸ் ராஜா, மரு. கெரின் சேல்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.